7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, Sir, I move—

'That, with reference to Rule 221(1) of the Tamil Nadu Legislative Assembly Rules, this Assembly do proceed on date to be fixed by the Hon. the Speaker to elect eleven members to be members of the House Committee for the financial year 1969–70.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒற்றை மாற்று வாக்கு முறைப் படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதி முறைகளின்கீழ், அவையினர் குழுவிற்கு House Committee) 11 உறுப் பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 12-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து—பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 13-ம் தேதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ம் தேதி சனிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக்கொள்ள லாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினொன்றுக்கு மேற்படுமாயின் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ம் தேதி திங்கட் கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

8. 1969–70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. என் எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே இந்த 1969–70-ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தின்கீழ் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். "காகிதப் பூ மணக்காது, காங்கிரஸ் சோஷலிஸம் இனிக்காது" என்று கூறிய திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்திற்குக் கொடுத்திருக்கின்ற மூன்றாவது வரவு–செலவுத் திட்ட நிதி நிலை அறிக்கையினைத் துருவித் துருவிப் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகம் கூறிவந்த விஞ்ஞான சோஷலிசமோ அல்லது விளக்கமோ, அல்லது வாக்குறுதியோ இந்த நிதி நிலை அறிக்கையில் எந்தப் பக்கத்திலும் காணப்படவில்லை என்பதோடு, திரா விட முன்னேற்றக் கழகத்தின் குறைந்தபட்ச பொருளாதாரக் கொள்கை என்ன என்பதற்கான விளக்கமும் எந்தப் பக்கத்திலும் காணப் படவில்லை. கடந்த மூன்றாண்டுகளாகக் காங்கிரஸ் வலியுறுத்திவந்த இல